# நூல் தொகுப்பு ‘பாலஸன்ஸ்கார்’ : பகுதி 7

# தொலைக்காட்சி, கைபேசி மற்றும் இணையதளத்தின் பாதிப்பிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்!

(Protect your children from the harmful effects of TV, Mobile & Net - Tamil)

## முன்னுரை

‘ஸனாதனின் ‘பாலஸன்ஸ்கார்’ நூல்தொகுப்பில் ‘தொலைக்காட்சி, கைபேசி மற்றும் இணையதளத்தின் தீமையைக் களைந்து நன்மை அடையுங்கள்!’ என்ற நூல் குழந்தைகளுடன் கூட பெற்றோர் மற்றும் ஆசிரியர் ஆகியோருக்கும் பயன் அளிக்கக் கூடியது. இவ்வாறிருக்க ‘வேறொரு கையேட்டின் அவசியம் என்ன?’, என்ற கேள்வி சிலரின் மனங்களில் எழலாம். இந்த கையேடு கொண்டு வருவதன் நோக்கம் கீழ்வருமாறு.

‘பெற்றோரும் ஆசிரியர்களுமே குழந்தைகளின் ‘முதல் குரு’, என்று ஹிந்து கலாச்சாரம் கற்றுத் தருகிறது. ஜீஜாமாதா மற்றும் தாதோஜி கொண்டதேவ் ஆகியோர் சிவாஜியின் இளம் வயதிலேயே நல்ல ஸன்ஸ்காரங்கள் பதியும்படி செய்தனர். இதனால் சிவாஜி தன் 15-ம் வயதில் ஒரு பெண்ணைக் கற்பழித்த குற்றத்திற்காக ரஞ்சாவை சேர்ந்த பாடீல் என்பவனின் கைகள், கால்களை வெட்டி எறிந்தார். அவரே பின்னர் ராமராஜ்யத்தை ஒத்த ‘ஹிந்தவி ஸ்வராஜ்யத்தை’ ஸ்தாபனம் செய்தார். இன்றைய பெற்-றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் தேசத்திற்கான தங்களின் தார்மீக கடமையாக தேசப்பற்று, தர்மப்பற்றுள்ள, ஒழுக்கம் மிகுந்த இளந்தலைமுறையினரை உருவாக்க முயற்சிக்க வேண்டும் என்பதே இந்த கையேட்டின் நோக்கம்.

குழந்தைகளுக்கு மற்றவரைப் போல் செய்வது பிடிக்கும். அவர்களுக்கு ஸன்ஸ்காரங்களைப் பற்றி வெறும் உபதேசம் செய்தால் போதாது, பெற்றோர்கள் தாங்களே நல்ல ஸன்ஸ்காரங்களுடன் நடந்து காண்பிக்க வேண்டும். பெற்றோரின் நடவடிக்கைகளால் குழந்தை-களிடம் தானே ஸன்ஸ்காரங்கள் ஏற்படுகின்றன. இக்-கண்ணோட்டத்தில் பெற்றோர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது’, என்பது பற்றி இந்த கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

இன்று தொலைக்காட்சி, கைபேசி மற்றும் இணைய-தளம் ஆகிய தகவல் தொடர்பு ஸாதனங்களில் முக்கியமாக கலாச்சார சீர்கேடு, ஆபாசம், வக்ர சிந்தனை ஆகிய ரஜ-தம தன்மை நிறைந்துள்ளன. அதனால் ஹிந்து தர்மம்

மற்றும் கலாச்சாரத்திற்கு பெருமளவில் தீங்கு ஏற்பட்டுள்ளது. ஹிந்து சமூகத்தினருக்கு தர்மபோதனை கிடைக்காததால் இளம் சந்ததியினர் உலக விஷயங்களில் மூழ்கி தர்மத்தை மறந்து விட்டனர். தர்மமே ராஷ்ட்ரத்தின் அடித்தளம். தர்மத்திற்கு தீங்கு ஏற்பட்டால் ராஷ்ட்ரமே அழிந்து போக வெகுநேரம் பிடிக்காது. அதனால் 'தொலைக்காட்சி, கைபேசி மற்றும் இணையதளம் ஆகியவற்றின் மூலமாக தர்மபோதனையை எவ்வாறு அனைவருக்கும் சென்றடைய செய்வது ?' என்பது பற்றி இந்த கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. 'பாரதத்தின் ஆன்மீக பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்', என்பது பெற்-றோர் மற்றும் ஆசிரியர்களின் தார்மீக கடமையாகிறது.

குழந்தைகளிடம் தீய ஸன்ஸ்காரங்களை ஏற்படுத்தும், அத்துடன் ராஷ்ட்ரம் மற்றும் தர்மத்திற்கு தீங்கு விளை-விக்கும் நிகழ்ச்சிகளை காண்பிக்கும் தொலைக்காட்சி சானல்களைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அது உரிய பலனைத் தராவிட்டால் இது போன்ற தொலைக்-காட்சி சானல்களை புறக்கணித்தல் ஆகிய முயற்சிகளை செய்வது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் தார்மீக கடமையாகிறது. இது சம்பந்தமாக இந்த கையேட்டில் வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

சமூகம், 'ஸாதனையில்' ஈடுபட்டால் மட்டுமே அதாவது 'இறைவனை அடைய முயற்சித்தால்' மட்டுமே ஸாத்-வீகமானதாக இருக்கும். ஒருவர் ஸாத்வீகமானவராக மாறினால் ஸாதனையால் கிடைக்கும் ஆனந்தத்தால் அவர் ரஜ-தம விஷயங்களுக்கு பலியாக மாட்டார். அதனால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தாங்கள் முதலில் ஸாதனையில் ஈடுபட வேண்டும். 'குழந்தை-களுக்கு ஸாதனையில் ஆர்வம் ஏற்பட என்ன செய்ய வேண்டும்?' என்பது பற்றி பெற்றோருக்கும் ஆசிரியர்-களுக்குமான வழிகாட்டுதல் இந்த கையேட்டில் உள்ளது.

இந்த கையேட்டைப் படிக்கும்போது பெற்றோர்-களுக்கும் ஆசிரியர்களுக்கும் இதிலுள்ள விஷயங்கள் பூரணமாக இல்லாதது போல் தோன்றும்; இதன் காரணம் 'தொலைக்காட்சி, கைபேசி மற்றும் இணையதளத்தின் தீமைகளைக் களைந்து நன்மை அடையுங்கள்!' என்ற மூல நூலிலுள்ள விஷயங்கள் மறுபடியும் இந்த கையேட்டில் வராமல் தவிர்க்கப்பட்டுள்ளது. அதனால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மூல நூலுடன் இந்த கையேடு ஆகிய இரண்டையும் படிப்பது அவசியமாகிறது.

‘இந்த கையேட்டைப் படித்து பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள், குழந்தைகளிடம் தங்களுக்குள்ள கடமை மற்றும் பொறுப்பை உணர்ந்து வருங்கால சந்ததியினர் எல்லா வகையிலும் ஆதர்சமாக உருவாவதற்கு முயற்சிக்க வேண்டும்’, என்பதே ஸ்ரீ குருசரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை!’ – **தொகுத்தவர்**

## அட்டவணை


1.நவீன தகவல் தொடர்பு ஸாதனங்களால் தற்காலத்தில் நிர்மாணமாயுள்ள குடும்பத்தின், சமூகத்தின் மற்றும் கலாச்சாரத்தின் பயங்கர நிலைமை 13

2.தேசத்தின் வருங்கால சந்ததியினரை உருவாக்கும் திறன் பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமுமே உள்ளது! 15

3.பெற்றோர்களின் கடமை 16

4.ஆசிரிய பெருமக்களின் கடமை 50